# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


TEDC

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2021

## வளர் தமிழ் 8

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

TEDC

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. சார்பெழுத்துகளின் எண்ணிக்கை

அ) 21 ☐ ஆ) 30 ☐

இ) 12 ☐ ஈ) 217 ☐

2. உள்ளம் தூய்மையடைவது

அ) பொய்யால் ☐ ஆ) நீரால் ☐

இ) வாய்மையால் ☐ ஈ) அன்பால் ☐

3. குலசேகரம் வைரவமுத்து எனும் இயற்பெயர் கொண்ட மன்னன்

அ) பண்டாரவன்னியன் ☐ ஆ) காக்கைவன்னியன் ☐

இ) சங்கிலியன் ☐ ஈ) கயிலைவன்னியன் ☐

4. யானையின் இளையது கன்று போல் அணிலின் இளையது

அ) குட்டி ☐ ஆ) பறழ் ☐

இ) பிள்ளை ☐ ஈ) கன்று ☐

5. வைதல் என்பது

அ) ஏசுதல் ☐ ஆ) பாடுதல் ☐

இ) அடித்தல் ☐ ஈ) வருதல் ☐

6. புதிதாகத் தோன்றிய இலையின் பருவத்தைக் குறிக்கும் சொல்

அ) பழுப்பு ☐ ஆ) கொழுந்து ☐

இ) தளிர் ☐ ஈ) சருகு ☐

7. அம்மா! இங்கே வாருங்கள். இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமை

அ) முதலாம் வேற்றுமை ☐ ஆ) ஐந்தாம் வேற்றுமை ☐

இ) மூன்றாம் வேற்றுமை ☐ ஈ) விளிவேற்றுமை ☐

8. அன்னை பூபதி பிறந்த இடம்

அ) ஆரையம்பதி ☐ ஆ) கல்லாறு ☐

இ) ஏறாவூர் ☐ ஈ) வாகரை ☐

9. இலங்கையை ஆண்ட இறுதிச் சோழமன்னன்

அ) குலோத்துங்கசோழன் ☐ ஆ) இராசராசசோழன் ☐

இ) இராசேந்திரசோழன் ☐ ஈ) பராந்தகசோழன் ☐

10. மழைநீர் நிறைந்து ஊரெல்லாம் குளிர்ச்சி அடையும் காலம்

அ) கோடைகாலம் ☐ ஆ) இலைதளிர்காலம் ☐

இ) இலைஉதிர்காலம் ☐ ஈ) மாரிகாலம் ☐

11. கேளிர் என்பது

அ) நண்பர் ☐ ஆ) உறவினர் ☐

இ) பகைவர் ☐ ஈ) பாணர் ☐

12. ஓ,உம், தோறும் என்பன ________________ ச் சொற்கள்

அ) வினை ☐ ஆ) பெயர் ☐

இ) இடை ☐ ஈ) உரி ☐

13. சனநாத மங்களம் என அழைக்கப்பட்ட நகரம்

அ) அநுராதபுரம் ☐ ஆ) பொலநறுவை ☐

இ) கண்டி ☐ ஈ) கொழும்பு ☐



TEDC

14. தன்மைப் பன்மை வினைமுற்று

அ) சென்றேன் ☐ ஆ) சென்றாய் ☐

இ) சென்றோம் ☐ ஈ) சென்றான் ☐

15. நெல் + பயிர்

அ) நெற்பயிர் ☐ ஆ) நெட்பயிர் ☐

இ) நெல்லுப்பயிர் ☐ ஈ) நெல்ப்பயிர் ☐

16. புதிதாகச் செய்த தேர்,கப்பல் போன்றவற்றை முதன்முதலாக ஓடவிடுதல்

அ) ஒத்திகை ☐ ஆ) அரங்கேற்றம் ☐

இ) வெள்ளோட்டம் ☐ ஈ) முற்றுகை ☐

TEDC

17. இந்தியாவிடம் அறம் கேட்டு உண்ணா நோன்பு மேற்கொண்டவர்

அ) திலீபன் ☐ ஆ) தெரேசா ☐

இ) ஆழிக்குமரன் ☐ ஈ) தமிழ்ச்செல்வன் ☐

18. பின்வருவனவற்றுள் இடைநிலைகள்

அ) ஐ, ஆல் ☐ ஆ) அன், ஆல் ☐

இ) அத்து, அற்று ☐ ஈ) த், ட் ☐

19. திருத்தக்கதேவர் எழுதிய நூல்

அ) சிலப்பதிகாரம் ☐ ஆ) மணிமேகலை ☐

இ) குண்டலகேசி ☐ ஈ) சீவகசிந்தாமணி ☐

20. கூறுங்கள் எனும் பயனிலைக்குரிய எழுவாய்

அ) நீங்கள் ☐ ஆ) நீ ☐

இ) நான் ☐ ஈ ) அவர்கள் ☐

21. மயில் அகவும். அது போல் ஆந்தை

அ) அலறும் ☐ ஆ) கொக்கரிக்கும் ☐

இ) கரையும் ☐ ஈ ) பேசும் ☐

22. ஒன்று இல்லாதபோதுதான் அதன் அருமை தெரியும் என்பதை விளக்கும் பழமொழி

அ) நிழலின் அருமை வெயிலில் தெரியும். ☐

ஆ) அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி. ☐

இ) துள்ளின மாடு பொதி சுமக்கும். ☐

ஈ) உண்மையின் உயர்வு. ☐

23. வாழையும் தெங்கும் குலை தாங்கி நின்றன. இதில் தெங்கு என்பது

அ) கமுகு ☐ ஆ) தென்னை ☐

இ) வேம்பு ☐ ஈ ) கரும்பு ☐

24. பின்வருவனவற்றில் கிறித்தவ இலக்கியம் அல்லாதது

அ) இயேசுகாவியம் ☐ ஆ) தேம்பாவணி ☐

இ) இரட்சணியயாத்திரீகம் ☐ ஈ ) திருவருட்பா ☐

25. உருவக அணிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நெஞ்சக்கல் ☐ ஆ) மதிமுகம் ☐

இ) தேன்தமிழ் ☐ ஈ ) கடலறிவு ☐

TEDC

26. ஊரார் கொடுக்கும் செல்லத்தில் செருக்கொடு மலர்ந்திருந்த பூ

அ) முல்லை ☐ ஆ) காட்டுமல்லிகை ☐
இ) அல்லி ☐ ஈ) சம்பங்கி ☐

27. அவர்கள் வாழ்க! என்பது

அ) வியங்கோள்வினை ☐ ஆ) செய்வினை ☐
இ) ஏவல்வினை ☐ ஈ) தெரிநிலைவினை ☐

28. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

அ) வைரவிழா ☐ ஆ) பவளவிழா ☐
இ) பொன்விழா ☐ ஈ) வெள்ளிவிழா ☐

TEDC

29. அடக்கமின்றிப் பேசுதல் என்பது

அ) தலைகவிழ்தல் ☐ ஆ) வாய்காட்டல் ☐
இ) ஒற்றைக்காலில் நிற்றல் ☐ ஈ) தோள்கொடுத்தல் ☐

30. போற்றிப்புகழ்ந்து என்பது

அ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஆ) இணைமொழி ☐
இ) அடுக்குத்தொடர் ☐ ஈ) இரட்டைக்கிளவி ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

வன்னிப் பெருநாட்டை வளர்த்து வளம் பெருக்கிக்கொண்டிருக்கிறது ஒரு குளம். இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பெருமையுடன் இறுமாந்து கிடக்கிறது அந்தக் குளம். எத்தனை வரலாறுகளை எத்தனை கோடி மக்களைக் கண்டிருக்கும் அந்தக் குளம்தான் இரணைமடுக்குளம். ஓர் அதிகாலை வேளை. இரணைமடுவின் மேற்கரையில் நிற்கிறேன். கிழக்கே காலிக்கிற கதிரவனின் ஒளித்தெறிப்பில் பொன்னென ஒளிர்கிறது இரணைமடு. நீரலைகள் அற்ற ஆழ் குளமாதலால் இரணைமடு தங்கத் தகட்டை விரித்துவிட்டாற்போல் மின்னிக் கொண்டிருக்கிறது. அக்குளத்தில் மீன்வளம் நிறைந்து காணப்படுகிறது. ஆழமான நீர் நிலையாதலால் இங்கு கொக்குகளும் நாரைகளும் அதிகம் வருவதில்லை. ஆழநீர் வேட்டையாடும் பறவைகளான ஆலா, நீர்க்காகம் போன்றவை இங்கு வருகின்றன. புல்வெளியில் துள்ளித்திரியும் மானினங்கள். ஆகா! என்னே இனிய கண்கவர் காட்சி.

1. இரணைமடு எவ்வாறு மின்னிக் கொண்டிருக்கிறது?

_______________________________________________

_______________________________________________

2. புல்வெளியில் எவை துள்ளித் திரிகின்றன?

_______________________________________________

_______________________________________________

3. வன்னிப் பெருநாட்டை வளர்த்து வளம் பெருக்கிக்கொண்டிருப்பது எது?

_______________________________________________

4. ஏன் இங்கு கொக்குகளும் நாரைகளும் அதிகம் வருவதில்லை?

_______________________________________________

5. இரணைமடுக்குளத்தில் எது நிறைந்து காணப்படுகிறது?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10



TEDC

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. தைப்பொங்கலின் வேறு பெயரைத் தருக.

______________________________

2. ஒல்லாந்தரையும் ஆங்கிலேயரையும் எதிர்த்துப் போராடிய தமிழ் மன்னன் யார்?

______________________________

______________________________

3. 'கத்துகடல் சூழ்நாகைக் காத்தான் தன்சத்திரத்தில்' என்ற பாடலைப் பாடியவர் யார்?

______________________________

______________________________

4. முக்கழகங்களும் எவை?

______________________________

5. பொங்கலன்று எங்கே கோலம் இடுவர்?

______________________________

6. அதியர்மான் நெல்லிக்கனியை யாருக்குக் கொடுத்தார்?

______________________________

______________________________

7. நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்ட பகுதியை எவ்வாறு அழைப்பர்?

______________________________

______________________________

புள்ளிகள் 10

TEDC

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

## தமிழர் பண்பாடு

| | | | | |
|---|---|---|---|---|
| வளர்த்த | உதவிய | அதனை | இல்லை | விருந்தினரை |

தமிழர்க் கென்று இருக்கின்ற
தனித்துவமான பண்பாட்டைத்
தமிழர் நாங்கள் காத்திடுவோம்!
துணிந்து ________________ ப் போற்றிடுவோம்!

பெற்று ________________ பெற்றோரைப்
பேணிக் காப்பது எம்கடமை!
கற்க ________________ ஆசானை
மதித்து நடப்பது எம்கடமை!

இல்லம் நாடும் ________________
இன்முகம் காட்டி வரவேற்போம்!
________________ என்று வருவோர்க்கு
ஈந்து மகிழப் பழகிடுவோம்!

புள்ளிகள் 10

TEDC

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் வேற்றுமை உருபுகள் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

   3 ஆம் வேற்றுமை ______________________________

   4 ஆம் வேற்றுமை ______________________________

2. சொல்லியங்களிலுள்ள ஆகுபெயர்களைக் கண்டறிந்து எழுதுக.

   1. தமிழீழம் போரினால் அல்லற்படுகிறது. ______________

   2. எழிலன் சுண்டல் உண்டான். ______________

3. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

   வினைச்சொல் ______________

   இரட்டைக்கிளவி ______________

   பலர்பால் ______________

4. வினைமுற்றுகளின் காலங்களையும் இடைநிலைகளையும் கண்டறிந்து எழுதுக.

| வினைமுற்று | காலம் | இடைநிலை |
|---|---|---|
| தேடினான் | ______________ | ______________ |
| காண்பர் | ______________ | ______________ |
| குடிக்கின்றன | ______________ | ______________ |

5. வினா எழுத்துகள் எத்தனை? ______________

   அவற்றைத் தருக. ______________

புள்ளிகள் 15

TEDC

6) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. நல்ல ________________ பெற்றோர் மட்டுமல்ல ஊராரும் விரும்புவர்.
   ( பிள்ளைகளை, பில்லைகளை )

2. பறவைகள் ________________ சிறகடித்துப் பறக்கின்றன.
   ( வாணத்தில், வானத்தில் )

3. உந்துகளிடமிருந்து வெளியேறும் ________________ வளி மாசடைகிறது.
   ( கழிவுகளினால், களிவுகளினால் )

4. கற்றறிந்த அறிஞர் ________________ கூடி இருந்தனர்.
   ( அறங்கில், அரங்கில் )

5. பாரதி கண்ட புதுமைப்பெண் அஞ்சாத ________________ கொண்ட நெஞ்சினள்.
   ( உருதி, உறுதி )

புள்ளிகள் 05

TEDC

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ பண்டாரவன்னியன்
- ✸ தைப்பொங்கல்
- ✸ நீங்கள் கண்டு களித்த இயற்கைக் காட்சி ( காலைக்காட்சி, மாலைக்காட்சி)

புள்ளிகள் 20

TEDC

TEDC

TEDC